**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.25/2022**

2023-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Chief Examination of PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேந்தர்பாபு | தந்தை பெயர் | சந்திரசேகரன் |
| கிராமம் | தஞ்சாவூர் | தாலுகா | தஞ்சாவூர் |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 56 | தொழில் | மருத்துவர் |

நாள் : 24.08.2023
வா.சா.1
முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. நான் என் சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள விவரங்கள் நான் சொன்னவை தான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். என் வழக்கிற்காக ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணங்கள்** | **அசல்/நகல்** | **குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்** |
|---|---|---|---|---|
| 1 | 13.09.1934 | வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியார் பெயரிலான தாவா சொத்தின் கிரைய பத்திரம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 24.05.1999 | வாதியின் தாத்தா ரெத்தினசாமி செட்டியாரின் வாரிசு சான்றிதழ் | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 06.07.2016 | வாதியின் தந்தை சந்திரசேகரன் இறப்பு சான்றிதழ் | அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 14.07.2021 | வாதியின் பெரிய தந்தை இராமநாதனின் இறப்பு சான்றிதழ் | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 01.01.1934 to 2015, 2016 to 2017 | வில்லங்க சான்றிதழ் | அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | 02.07.2018 | புதுக்கோட்டை கோட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவு | சார்பு நகல் | வா.சா.ஆ.6 |
| 7 | --- | தாவா சொத்திற்கு உரிய 10(1) சிட்டா | உண்மை நகல் | வா.சா.ஆ.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | | தாவா சொத்திற்கான அடங்கல் | உண்மை நகல் | வா.சா.ஆ.8 |

வா.சா.ஆ.1 அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு, அசல் மனுதாரர் வசம் கொடுக்கப்பட்டது.

- வா.சா.ஆ.1 தாவா சொத்தான சர்வே எண்ணுக்கு உரிய ஆவணம் கிடையாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. வா.சா.ஆ.1ன் பழைய புல எண்.188/2 குறிப்பிடப்பட்டுள்ளது, Re-survey யில் தான் சர்வே எண்.361/16 என மாற்றப்பட்டுள்ளது. ஆட்சேபனைக்கு உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.
- வா.சா.ஆ.5 ஆனது தாவா சொத்துக்கு உரியது இல்லை என்று குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.
- வா.சா.ஆ.7 ஆனது குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது, வா.சா.ஆ.6ன் கீழான உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது, இடைபட்ட காலத்தில் பெறப்பட்ட சிட்டாவை குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.
- வா.சா.ஆ.8 ஆனது குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.